**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/ 2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா**. 11**
**Defence**
**Court**

**Name : இளநீர் கண்ணன் என்ற கண்ணன்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 16th September 2021.

முதல் விசாரணை:

நான் தென்காசியில் இடைக்கால் என்ற கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இறந்த போன சுரேஷ், சேகர், செந்தில் என்ற செந்தில் குமார் ஆகியோரை எனக்கு தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் சம்பவத்தன்று ஊரில் இல்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது.

இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது:-

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 14.08.2007 அன்று காலை 10.15 மணிக்கு நானும் எனது நண்பர்களும் சுரேஷ் மற்றும் சேர்கர் ஆகியோருடன் தென்காசி கூளக்கடை பஜாரில் LR 8 பாளையம் சந்திப்பில் நிற்கும்போது மேற்கிலிருந்து கிழக்காக TN 72 X 0558 என்ற மோட்டார் சைக்கிளில் அலாவூதின் முனனால் சென்று எதிரே மேல முத்தாரம்மன் கோவில் பக்கம் TN72 Z 9757 என்ற அம்பாசிட்டர் காரில் சக்திபாண்டியன் தான் வருகிறான் என்று உறுதி செய்து கொண்டு வழிமறித்து நிறுத்தி பின்னால் TN 76 B 9529. TN 76B 4974 ஆகிய இரண்டு ஆட்டோக்களை நிறுத்தி அதிலிருந்து ஹனிபா, அப்துல்லா, அசன்கனி, மீரான் மைதீன், ஆயூப் அன்சாரி, நாகூர் மீரான் மற்றும் அவர்களது கூட்டாளிகள் ஆயுதங்களுடன் திபு திபுவென்று இறங்கி அம்பாசிட்டார் காரில் வந்து மேற்கே பார்த்து ஓடி வந்த சக்திபாண்டியன், சுரேந்தர், கபிலன், சுரேந்தர், சுப்பிரமணியன் ஆகியோர்களை விரட்டவும் அவர்கள் மறுபடியும் கிழக்கு பார்த்து ஓடினார்கள். ஆயுதங்களுடன் விரட்டிக்கொண்டிருந்த ஹனிபா மற்றும் அவரது கூட்டாளிகள் எங்களுடன் நின் சேகர், சுரேஷ், செந்தில் மற்றும் கூட்டாளிகளையும் வெட்டியும், குத்தியும் தாக்கினார்கள். நான் பயந்து போய் எங்கே நம்பையும் வெட்டி விடுவார்களோ என்று அந்த இடத்தை விட்டு ஒடிவிட்டேன். இந்த தாக்குதலில் சேகர், சுரேஷ், செந்தில், அசன்கனி பஷீர், நாகூர்மீரான் ஆகியோர்கள் இறந்து போய்விட்டதாக கேள்விப்பட்டதாக என்று போலீஸ் விசாரணையில் வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரிகளும் ஓரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் நாங்கள் சமாதானமாக போய்விட்டோம் என்பதால் அதன் அடிப்படையில் நடந்த சம்பவத்தை மறைத்து உண்மைக்கு மாறாக அரசு தரப்பு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**